# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 04 செவ்வாய்க்கிழமை (17.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 141


# விடுதலைப் புலிகளை அரசாங்கத்துடன் சம அந்தஸ்தில் வைத்துக் கருதமுடியாது

## நோர்வே ராஜதந்திரியின் கூற்றுக்கு வெளிவிவகாரச் செயலர் கண்டனம்



கொழும்பு,ஏப்ரல்17

**விடுதலைப் புலிகளை அரசாங்கத்துடன் சம அந்தஸ்தில் வைத்துக் கருதமுடியாது. அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சம அந்தஸ்து அளித்து சில தரப்பினர் வெளியிட்ட கருத்துக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அவை மிகவும் பொறுப்பற்றவை.**

**இவ்வாறு சாடியுள்ளார் வெளியுறவு அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித ஹொகன்ன.**

நோர்வேயைச் சேர்ந்த ராஜதந்திரி ஒருவர் வெளிநாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் சமதரப்பாக இருந்தே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று கருத்து வெளியிட்டிருந்தார்.

அதனைக் கண்டித்து வெளியுறவுச் செயலாளர் கடும் தொனியில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

நல்லனவற்றில் நம்பிக்கை வைக்காத, குற்றங்களைக் கண்டுபிடிக்கின்ற பித்தலாட்ட மனப்போக்குடன் முக்கிய விவகாரங்களில் கருத்துச் சொல்லக்கூடாது.

அரசாங்கம் இலங்கை மக்களால் சட்டபூர்வமாகத் தெரிவுசெய்யப்பட்டது. விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பாகும். இரண்டையும் எவ்வாறு சம அந்தஸ்தில் வைத்துக் கருதமுடியும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விருப்பம் கொண்டுள்ளது என்பதற்காக சம அந்தஸ்தில் வைத்துக் கருதுவது மிகவும் பொறுப்பற்ற ஒன்று. அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தையில் அக்கறை இல்லாமல் செயற்படுவதாகக் கூறுவதையும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது.2002ஆம் ஆண்டில்

(04ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பீதியால் மக்கள் இடம்பெயர்வு

மன்னார்,ஏப். 17

மன்னார் - விடத்தல்தீவுப் பகுதியிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் நேற்றுக்காலை மன்னார் - தோட்டவெளி ஜோசப் வாஸ் நகருக்கு பாதுகாப்புத் தேடி தற்காலிகமாக இடம்பெயர்ந்திருக்கின்றனர். இனந்தெரியாத ஆயுதபாணிகளால் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்கள் மற்றும் சித்திரவதைகள் காரணமாகவே இவர்கள் இடம்பெயர்ந்து வந்துள்ளனர் என்றும் அண்மைக்காலமாக மன்னார் நகரில் ஆயுதபாணிகளால் மக்கள் பெரும் இன்னல்களுக்கும், கஷ்டங்களுக்கும் ஆளாகிறார்கள் என்றும், இதனால் மக்கள் பெரும் பீதியுடனேயே தமது வாழ்நாள்களைக் கழித்து வருகின்றனர் என்றும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (சி)

## ஊடகவியலாளர் பரமேஸ்வரி நாட்டைவிட்டு வெளியேற்றம்?

கொழும்பு,ஏப்.17

புலிகளுக்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு சுமார் மூன்று மாதகாலம் வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த பின்னர், குற்றமற்றவர் எனத் தெரிவித்து விடுவிக்கப்பட்ட ஊடகவியலாளர் முனுசாமி பரமேஸ்வரி இந்தியா புறப்பட்டுச் சென்றார்.

இரண்டுவார கால ஊடகப் பயிற்சி நெறி ஒன்றை மேற்கொள்ளவே அவர் இந்தியாவுக்குச் சென்றார் எனக் கூறப்பட்ட போதிலும், பயிற்சி நெறி முடிந்து அவர் நாடு திரும்புவாரா என்பது குறித்து உறுதியானதகவல் ஏதும்கிடைக்கவில்லை.

அவரது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ள நிலையில் அவர் வேறு ஒரு நாட்டுக்குச் செல்லக்கூடும் என ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

ஊடகவியலாளர் பரமேஸ்வரி நீதிமன்றில் விடுவிக்கப்பட்ட பின்னர் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு பொறளையில் வைத்து மீண்டும் வெள்ளை வானொன்றில் கடத்தப்பட்டார் என ஒரு தகவல் தெரிவிக்கிறது. கண்கள் கட்டப்பட்டு, ஓர் இரகசிய இடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அவர் கடுமையாக எச்சரிக்கப்பட்டாராம்.

'மவ்பிம' பத்திரிகையில் சேவையாற்றக் கூடாது, எதிர்க் கட்சித்தலைவர் ரணில்

(04ஆம் பக்கம் பார்க்க)

## விமானத்தால் பரபரப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டு வான்பரப்பில் நேற்றிரவு 8 மணியளவில் திடீரென விமானம் ஒன்று மிகவும் வித்தியாசமான ஓசையுடன் பறந்து சென்றதால் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்பட்டது.

வழமையாக விமானங்கள் குடாநாட்டின் வான்பரப்பிற்குள் புகும் பாதைக்குப் புறம்பாக, வடமராட்சி கிழக்குப் பகுதி ஊடாக வான் பரப்பில் புகுந்த அந்த விமானம் பலாலியை அண்டிய பகுதியைக் கடந்து நகருக்கு மேலாகச் சென்றதை அதன் சத்தத்தின் திசையில் இருந்து அறிய முடிந்தது.

இந்த விமானத்தின் வான் பறப்பு மக்களைப் பலவாறாக யோசிக்க வைத்து பரபரப்புடன் பதற்றமுறவும் செய்தது. எங்கே, எது, என்ன நடக்கப்போகின்றதோ என்று அவர்கள் ஏக்கமடைந்தனர்.

(அ-1-155)

## மன்னார் மீனவர்கள் 13 பேர் திரும்பவில்லை

மன்னார்,ஏப்.17

மன்னார் கடற்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் பதின்மூன்று பேர் இதுவரை வீடு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை பள்ளிமுனையைச் சேர்ந்த பதினொரு மீனவர்களும் விடத்தல்தீவைச் சேர்ந்த இரு மீனவர்களும் மன்னார் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். ஏனைய மீனவர்கள் கரை திரும்பிய போதும் இந்த பதின்மூன்று மீனவர்களும் காணாமற்போயுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பள்ளிமுனை கோத்தப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் சக மீனவர்கள் முறைப்பாடு ஒன்றினைச் செய்திருக்கின்றனர். (அ-4)

## திருமலையில் கைக்குண்டுகள் மீட்பு

திருகோணமலை - கும்புறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் கைக்குண்டுகள் சில கைப்பற்றப்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கின்றது. கைக்குண்டுகள் - 02 மற்றும் உணவுக் கலன்கள் - 115 போன்றவையே படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

பொது மகன் ஒருவர் வழங்கிய தகவலையடுத்தே இந்த ஆயுதப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஊடக நிலையம் மேலும் குறிப்பிட்டிருக்கின்றது.

## கடத்தப்பட்டோர் விவரங்களை நாடு முழுவதும் திரட்ட முடிவு

கொழும்பு,ஏப்.17

நாடு முழுவதும் 1994ஆம் ஆண்டில் இருந்து காணாமல் போனோர்களின் விவரங்களையும் எண்ணிக்கையையும் சேகரிக்க பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக ஒவ்வொரு கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் செல்லும் கட்சிச் செயற்பாட்டாளர்கள் காணாமல் போனோர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்ட உள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சரத் ரணவக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் மே மாதம் முதல்வாரப் பகுதியில் இதற்கான பணிகள் ஆரம்பமாகும். கடத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளை கவனிப்பதற்கு என்னை கட்சி நியமித்துள்ளது.

பல்வேறு சமூகங்களையும் அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான மக்கள் கடத்தப்பட்டுள்ளனர். கடத்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரித்துச் செல்கின்றன. இந்த கடத்தல் சம்பவங்களில் அரசு, வேறு சில ஆயுதக்குழுக்கள், விடுதலைப் புலிகள் ஆகியோர் சம்பந்தப்பட்டுள்ளனர்.

எமது இந்த முயற்சியில் யார் யாரைக் கடத்தியது? அதற்கு யார் பொறுப்பானவர்கள் போன்ற விடயங்கள் ஆராயப்படும். எமது இந்த முயற்சி வெற்றிபெற எல்லா கட்சிகளும் தமது ஆதரவை வழங்கவேண்டும் - என்றார் அவர். (அ-சி)

## புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை மூன்று தடவைகள் தொடர் குண்டுவீச்சு

கிளிநொச்சி,ஏப்.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பகுதியில் மிக் - 27 ரக விமானங்கள் நேற்று மூன்று தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்றுக்காலை 8.15 மணிக்கும் பின்னர் 8.30 மணியளவிலும் அதன் பின்னர் 10.15 மணிக்கும் என்று மூன்று தடவைகள் விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டன.

இத்தாக்குதல்கள் காரணமாக பல வீடுகள் சேதமடைந்தன.

அப்பிரதேச மக்கள் பாதுகாப்பு இடங்களை நாடியதால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை எனக் கூறப்பட்டது.

(அ-1-4)

## ஈழத்தமிழர் ஆதரவை இல்லாமல் செய்ய தமிழகப் பொலிஸார் சதி செய்கின்றனர்

### பழ.நெடுமாறன் குற்றச்சாட்டு

சென்னை,ஏப். 17

தமிழகத்தில் ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வலுத்துவருகிறது. அதனை இல்லாமல் செய்வதற்கு தமிழகக் காவல்துறையினர் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு கண்டனம் தெரிவித்திருக்கிறார் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன்.

தமிழகத்து வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

அப்பேட்டியில் பழ.நெடுமாறன் மேலும் கூறியிருப்பதாவது:-

தென்கிழக்காசிய சந்தைகளில் பல்மடங்கு சக்தி வாய்ந்த ஆயுதங்கள் கிடைக்கும்போது சைக்கிள் பியறிங் குண்டுகளை கடத்தவேண்டிய தேவை விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இல்லை.

ஈழத்தமிழர் விடுதலைப் (04ஆம் பக்கம் பார்க்க)

## மண்டபம் முகாமிலிருந்த 3 இளைஞர்கள் விசாரணையின் பின்னர் தடுத்து வைப்பு

விடுதலைப் புலிகளின் உளவாளிகள் என்ற சந்தேகத்தில்

சென்னை,ஏப்.17

மண்டபம் முகாமில் தங்கியிருந்த ஈழ அகதிகளில் மூவர் 'கியூ' பிரிவு பொலிஸாரால் சென்னைக்குக் கூட்டிச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டனர். இரகசிய விசாரணையின் பின்னர் அவர்கள் மூவரும் செங்கல்பட்டுச் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவஜோதீஸ்வரன் (வயது 28), மன்னாரைச் சேர்ந்த ஜஸ்டின்ராஜ் (வயது 20), சுகந்தன் (வயது 27) ஆகியோரே சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.

இலங்கையில் இராணுவக் கெடுபிடிகள் அதிகரித்ததால் இவர்கள் மூவரும் அகதிகளாக வந்து மண்டபம் முகாமில் தங்கியிருந்தனர்.

சம்பந்தப்பட்ட மூவரும் விடுதலைப் புலிகளின் உளவாளிகளாக இலங்கையில் செயற்பட்டவர்கள் என்று விசாரணைகளில் இருந்து அறியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் (04ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் பகுதியில் கடற்கண்காணிப்பு தீவிரம்

சென்னை,ஏப்.17

இராமேஸ்வரம் கடற் பகுதியில் தமிழகக் கடலோர கடற்படையினரும் பொலீஸாரும் இணைந்து அதிதீவிர கண்காணிப்பு பணியை ஆரம்பித்துள்ளனர்.

கட்டுநாயக்க விமானத்தளம் மீது விடுதலைப் புலிகளின் வான்படை தாக்குதல் நடத்தியதை அடுத்து தமிழக கரையோரப் பகுதி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் ஓர் அங்கமாகவே நவீன ராடர் கருவிகள், பைனாகுலர் ஆகியன பொருத்தப்பட்ட ரோந்துக் கப்பல்கள், படகுகள் கண்காணிப்புப் பணியை ஆரம்பித்துள்ளன.

கடலில் அத்துமீறும் படகுகள் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றன.

விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பொருத்தப்பட்ட இரு கப்பல்கள் ரோந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இப்போது அமைக்கப்பட்டுள்ள எட்டு நவீன ராடர்களுக்கு மேலதிகமாக ஒன்பது ராடர்கள் பொருத்தப்படவிருக்கின்றன என்று தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர்

(அ-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

தோற்றம்
03 - 05 - 1921



மறைவு
17 - 03 - 2007

**திருமதி றோஸ் தேவநேசம் நைல்ஸ்**

''ஒருபோதும் மறவாத உண்மைப்பிதா
இருக்க உனக்கென்னகுறை மகனே''

மறுமைக்குள் பிரவேசித்தஒருமாத நிறைவைமுன்னிட்டு நன்றிசெலுத்தும் ஆராதனை இன்று (17.04.2007) செவ்வாய்க்கிழமை மாலை 3மணிக்கு மருதனாம்மடம் பெண்கள் நிலையத்திலுள்ள சிற்றாலயத்தில் நடைபெற இருப்பதால் தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக இதனை ஏற்று சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பெண்கள் நிலையம்,
மருதனாம்மடம். (59716)

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 - 06 - 1920



மறைவு
27 - 04 - 2006

அமரர் கணபதிப்பிள்ளை குமாரசுவாமி
[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

''ஆண்டொன்று ஓடினும்ஆறுமோ நின்துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடைக''
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

எமது இல்லத்தில் இன்று [17.04.2007] செவ்வாய்க்கிழமை நிகழும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
திருமதி இ.குமாரசாமி, கு.வர்ணகுலராசா

வீ.எம்.வீதி,
பருத்தித்துறை. (59811) (மகன், ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

## மரண அறிவித்தல்

**சின்னத்தம்பி கந்தையா** (ஓய்வு பெற்ற ஆசிரியர்)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் புலவனார் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா 15.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் புதல்வரும், இரத்தினத்தின் சகோதரரும், காலஞ்சென்ற சிவஞானம் - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கௌரிபாலன்(கனடா), பாலகௌரி(கனடா), சங்கரபாலன் (கனடா), ஜெயகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராணி (கனடா), ஜெகதீசன்(கனடா), தயாளினி(கனடா), இராஜேந்திரன் (HMA,போதனா வைத்தியசாலை, யாழ்.) ஆகியோரின் மாமனும் கனடாவில் வசிப்பவர்களான ஷோபா, கௌசிகன், வாணி, ஜனகன், கவின், லவன், கேசின் மற்றும் சுபா, துவாரகா, துளசிகா, (மாணவிகள் - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி)ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நேற்று திங்கட்கிழமை தகனம் செய்யப்பட்டது.

தகவல்
லோகேஸ்வரி (மனைவி),
ஜெயகௌரி (மகள்), குடும்பத்தினர்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு. (59721)

## அத்தியாவசிய சேவைகள்; யாழ்.செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.17

குடாநாட்டின் அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள், பிரதேச செயலர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (அ-8)

## கால்சன் முன்பள்ளி விளையாட்டு விழா

(கோணப்புலம், மல்லாகம்)

இடம் :-கால்சன் முன்பள்ளி
(கோணப்புலம் நலன்புரி நிலையம்)
காலம் :-நாளை (18.04.2007)
புதன்கிழமை காலை 11மணிக்கு
பிரதம விருந்தினர் :- வண.எம்.தவராஜா பென்ஜமின் (சீயோன் தேவாலயம், மயிலங்காடு)

முன்பள்ளி சிறார்களின் திறமைகளைக் கண்டுகளிக்கவும், உற்சாகப்படுத்தவும் அனைத்து அன்பு உள்ளங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(59732) நிர்வாகக்குழு.

அனுசரணை :-
டான் கால்சன், அமெரிக்கா

## விற்பனைக்கு

மல்ரி மீடியா புறஜெக்டர் (ஒப்பிமா) விற்பனைக்குண்டு. தொடர்பு :
0777 037806

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**றோஸ் மனோரஞ்சினி சேவியர்**

தோற்றம்
08 - 03 - 1952

மறைவு
17 - 04 - 2000

ஏழு ஆண்டுகள் நகர்ந்தாலும்
அழியாது உங்கள் நினைவுகள்
நாம் வாழும் வரை என்றும்
எம் மனங்களில் நிறைந்திருக்கும்.

(59724)

''நிரஞ்சினி''
சண்டிலிப்பாய்வீதி,
பண்டத்தரிப்பு.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
### பாராட்டு விழா

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய எமது பாடசாலை மாணவிகள் 232 பேரும் சித்தியடைந்தமையையும், அவர்கள் அனைவரும் க.பொ.த உயர்தர வகுப்புகளுக்குத் தகுதி பெற்றமையையும் பாராட்டுமுகமாக 18.04.2007ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பாராட்டு நிகழ்வொன்றை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. பரீட்சையில் சித்தியெய்திய அனைத்து மாணவிகளும் (சீருடையில்) அதில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்துடன் கல்லூரி ஆசிரியர்களையும் பழைய மாணவர் சங்கத்தினரையும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(சி/52284)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை செல்வி மதிவதனா
இராமநாதன் அவர்களின் அன்புத்தாய்

**இராமநாதன் தங்கரத்தினம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/நிவேலி சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலை.

(59735)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
15 * 04 * 1989



உதிர்வு
29 * 04 * 2006

**நிஷாந்தினி லோகப்பிரகாஸ்**

புத்தாண்டு வாழ்த்திநின் மறு
நாள்
பிறந்தநாள் வாழ்த்தையும்
சந்தோஷத்துடன் ஏற்றுக்
கொள்ளும்
சித்திரையின் புத்திரியே !
உன் சிரித்த முகத்தினைப்
பார்க்க
அந்த சித்திரைக்கே பொறுக்க
வில்லையோ?

இறுதி சனிக்கிழமை நீ
உதித்த சித்திரையில்
உன் இனிய சிரிப்பொலி
மறைந்ததேனோ?
மதியிழந்த வானத்தைப்
போல் - உன் இல்லம்
மகிழ்விழந்து நிற்பதை அறி
வாயோ?
ஆண்டொன்று ஆனாலும்
அழியாது உன் நினைவு
எம் இதயங்களை விட்டு !

நாளை (18.04.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(59717)

உனது பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரம்,
மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், பெரியம்மா,
பெரியப்பா, மச்சாள்மார், மச்சான்மார்,
உடன்பிறவாச் சகோதரர்கள்.

860,பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## திருவருள்மிகு ஸ்ரீ நாகராஜ ராஜேஸ்வரி அம்பாள் திருக்கோயில் - நவாலி.

**14.04.2007 அன்று நிகழ்ந்த அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்**

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | 0150 |
| 2 ம் பரிசு | - | 1927 |
| 3 ம் பரிசு | - | 2913 |

ஆறுதல் பரிசில்கள்

| | |
|---|---|
| 1) 1807 | 2) 0296 |
| 3) 1115 | 4) 1917 |
| 5) 2903 | |

மேற்படி பரிசில்களை 20.04.2007 வெள்ளி மாலை 4 மணிக்கு ஆலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(59730) இந்து இளைஞர் மன்றம்.

## மரண அறிவித்தல்



**K. சிவகுமார்**

(லய ஞானசுடர் ஒளி,பிரபல தவில்மேதை)

நாச்சிமார் கோயிலடியைச் சேர்ந்த பிரபல தவில்வித்துவான்,லய ஞானசுடர் ஒளி கணேசபிள்ளை சிவகுமார் அவர்கள் 14.04.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார்பிரபல தவில்மேதை அமரர் கலைமாமணி K.கணேசபிள்ளையின் அன்புமகனாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும். அவரது துக்க நிகழ்வுகள் சித்தன்கேணியில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோயிலடி,
சித்தன்கேணி. (59720)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

## ஒத்துமாறல்

வவுனியா தெற்கு வலயப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் விஞ்ஞானபாட ஆசிரியர் யாழ். மாவட்டப் பாடசாலை ஒன்றுக்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு:
0776648242,
0602212496

## வீடு வாடகைக்குண்டு

55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
க.தங்கமகேந்திரன்,
77, கல்லூரி வீதி,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அந்தோனிமுத்து திலகசூரியர்**
(திலகு)

தோற்றம்
10 - 10 - 1949

மறைவு
17 - 04 - 2006

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
எம்மைத் தரணியில் வாழவழிவகுத்து
வாழ்ந்த எம் சொந்தமே!
உங்களைப் பிரிந்து ஓர் ஆண்டாகியும்
மறக்க முடியவில்லை, நினைவோ அழியவில்லை.

''நிரஞ்சினி''
சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (59722)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# வீண் ஜம்பம் அடிக்கும் நேருவின் அரசியல் வாரிசு

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது நேரு குடும்பத்தின் அடுத்த அரசியல் வாரிசுரிமை பெற்ற ராகுல் காந்தி கூறிய கருத்துகள் இந்தியாவில் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கின்றன.

ராகுல் காந்தியின் பூட்டனார் ஜவஹர்லால் நேரு இந்திய சுதந்திரப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவர். அவரும் அவரது மகள் இந்திராகாந்தியும், இந்திரா காந்தியின் மகன் ராஜீவ் காந்தியும் இந்தியப் பிரதமர்களாகப் பணி புரிந்தவர்கள். இப்போதும் அந்தக் குடும்ப வாரிசுகளிடம்தான் இந்திய அரசியல் அதிகாரத்தின் மூக்கணாங்கயிறு உள்ளது.

ராஜீவ் காந்தியின் புதல்வர் ராகுல் காந்தி, தமது அரசியல் வாரிசுரிமை அடிப்படையில் தெரிவித்த கருத்துகளே இப்போது பெரும் சர்ச்சையைத் தோற்று வித்திருக்கின்றன.

*"இந்தியாவை உருவாக்குவதில் எங்கள் குடும்பத்தின் பங்கு முக்கியமானது. எங்கள் குடும்பத்தினர் ஒரு முடிவெடுத்துவிட்டால் அதில் இருந்து பின் வாங்கவே மாட்டார்கள். இந்திய சுதந்திரப் போராட்டம், பாகிஸ்தானைப் பிரித்து பங்களாதேஷைத் தனி நாடாக உருவாக்கியமை, 21ஆம் நூற்றாண்டுக்கு இந்தியாவை எடுத்துச்சென்றமை ஆகிய வெற்றிகளுக்கு எங்கள் குடும்பத்தினரே காரணம்."* - என்றுகூறி பெருமையடித்துக் கொண்டிருக்கிறார் ராகுல்.

அவர் அவ்வாறு பெருமை அடித்துக் கொண்டமை சரிதானா என்ற கேள்வியே பெரும் சர்ச்சையை உருவாக்கியிருக்கின்றது.

இந்தக் குடும்பப் பெருமையைப் பீற்றிக்கொள்ளும் விடயம் இந்திய அரசியலுடன் மட்டும் சம்பந்தப்பட்டது அல்ல என்பதாலும் இவ்விடயத்தில் ஈழத் தமிழரின் நலனும் எங்கோ ஓரிடத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றது என்பதாலும் இது ஈழத் தமிழர்களுக்கும் முக்கியமான அம்சமாக அமைகின்றது. அதனால் ஒருசில கேள்விகளை, நேரு குடும்பவாரிசிடம் கேட்கவேண்டியவர்களாக - வினாவெழுப்ப வேண்டியவர்களாக - இருக்கின்றார்கள் ஈழத்தமிழர்கள்.

*"எங்கள் குடும்பத்தினர் ஒரு முடிவெடுத்து விட்டால் அதிலிருந்து பின்வாங்கவே மாட்டார் கள்."* - என்று பிரலாபிக்கும் ராகுல் காந்தி, தங்கள் குடும்பத்தின் ஒரு சந்ததித் தலைவர் எடுத்த முடிவை, அடுத்த சந்ததித் தலைவர் போட்டுடைத் துக் குழப்பிய காரணத்தாலேயே பக்கத்து இலங் கைத்தீவில் இன்று ஈழத் தமிழர்கள் இவ்வளவு பேரவலப்பட நேர்ந்துள்ளனர் என்பதை மறந்தமை ஏனோ?

இலங்கையில் பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் மேலாண்மைத் திமிர்ப் போக்குக் கொடூரத்தை எதிர்கொண்டு நிற்கும் ஈழத் தமிழினத்தின் உண்மைநிலையை நன்கு அறிந்துகொண்டவராக இதே ராகுல் காந்தியின் பேத்தியார் இந்திராகாந்தி அம்மையார் இருந்தார். எண்பதுகளின் நடுப்பகுதி வரை இந்தியப் பிரதமராக இருந்த அவருக்கு ஈழத் தமிழர்கள் மீது இரக்கமும், அனுதாபமும், பற்றுணர்வும் இருந்தன. தமிழர்களது பரிதாபநிலைமை குறித்து ஆழமான புரிந்துணர்வு அவருக்கு இருந்தது. ஈழத் தமிழர்கள் எத்தகைய அரச ஒடுக்குமுறைக்கு முகம் கொடுத்து நிற்கின்றார்கள் என்ற தெளிவு அவருக்கு இருந்தது. தேர்ச்சியும், முதிர்ச்சியும், ஆழ்ந்த அரசியல் அறிவும் கொண்ட அவருக்கு, தென்னிலங்கையில் ஆட்சிக்கட்டில் இருந்த ஜே. ஆர். ஜெய வர்த்தனாவின் குள்ளநரித்தன அரசியல் குணவியல்பும், இனவாதக் கொடூரப் போக்கும், அதனால் ஈழத் தமிழர்கள் அனுபவிக்கும் பேரவலமும் நன்கு தெரிந்தே இருந்தன.

இன உணர்வாலும், பண்பாட்டு உறவுகளாலும், வரலாற்று வேர்களாலும் இந்தியாவின் தமிழகத்துடன் பின்னப்பட்டிருந்த தமிழர்களுக்காக - அவர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்காக - இந்தியா ஆற்ற வேண்டிய பங்கு பணியை இந்திரா அம்மையார் நன்கு உணர்ந் திருந்ததோடு, அது குறித்து திட்டவட்டமான - தெளிவான - நிகழ்ச்சிப்பாதை நிரல் ஒன்றையும் கொண்டிருந்தார்.

பங்களாதேஷுக்கு அடுத்து ஈழத்தின் தேசிய விடுதலையைப் பெற்றுக்கொடுப்பது அவரின் இலக்காகவும், நோக்காகவும் இருந்தது. அதற்காக ஒழுங்குமுறையாகத் திட்டமிட்டு, வியூகம் வகுத்து, காய்களை நகர்த்தினார் அவர். கருக்கட்டிய ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்ட சக்திகள் உருக்கொண்டு, விஸ்வரூபம் எடுத்தமை இந்தப் பின்னணியில்தான் என்பது இன்று உலகறிந்த இரகசியம்.

ஆனால், ஈழத்தமிழர்கள் செய்த பாவமோ என்னவோ, ஈழத் தமிழர்களுக்கு உரியதைப்பெற் றுக் கொடுக்கும் தனது திட்டத்தை இந்திரா அம்மையார் நிறைவு செய்ய முன்னர் - இடைநடுவில் - காலன் அவர் உயிரைப் பிடுங்கும் அவலம் நேர்ந்தது. ஒரு மாபெரும் தார்மீக சக்தியை ஈழத் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டம் இழந் தது. ஈழத் தமிழர் களின் அரசியல் அபிலாஷையையும், நம்பிக்கையை யும் தகர்க்கும் பேரிடியாக இந்தத் தனிமனித மறைவு அமைந்தது.

அதன்பின்னர் இந்திரா அம்மையாரின் மக னும், இப்போது குடும்பப் பெருமை குறித்து பிரபலாபிக்கும் ராகுல் காந்தியின் தந்தையாருமான ராஜீவ் காந்தி பிரதமராகி அதிகாரத்துக்கு வந்தார்.

தாய் இந்திராகாந்தி போலல்லாமல், ஆழமான அரசியல் தரிசனமோ, இராஜதந்திர முதிர்ச்சியோ இல்லாமல் அந்த இளைஞரான ராஜீவ், ஈழத்தமிழர்களின் தேச விடுதலை தொடர்பாகத் தமது தாயார் கைக்கொண்ட 'நியாயப் போக்கு மேலாண்மைக் கொள்கையை' கைவிட்டார். முதிர்ந்த ஜெயவர்த்தனாவின் அரசியல் நரித்தனத் தந்திரத்துக்கும் சாணக்கியத்துக்கும் அவர் அடிபணிந்து விட்டுக்கொடுத்து, அதன் மூலம் ஈழத்தமிழர்களை நட்டாற்றில் விட்டார்.

அது மாத்திரமல்லாமல், தமது தாயார் தனது அரசு மூலம் ஊக்குவித்து, கட்டி வளர்த்த ஈழத்தமிழரின் தேச விடுதலைப் போராட்ட சக்திகளை அழித்தொழிக்க தமது நாட்டுப் படைகளை ஆக்கிரமிப்புச் சேனையாக ஈழத் தமிழகம் மீது ஏவிவிட்டு, பெருங் கொடுமைபுரியவும் காலானார்.

- இவை கடந்துபோன சரித்திரப் பதிவுகள்.

இப்படி ஈழத் தமிழர் விடயத்தில் இந்திரா அம்மையார் விதைத்ததை அறுவடைக்கு முன் குழப்பி, பிடுங்கி எறிந்து, நாசப்படுத்த முயன்ற வரலாற்றுக் குற்றத்தை இழைத்தவராக ராஜீவின் அரசியல் பங்கு அமைகிறது.

அதை மூடி மறைத்து - அல்லது மறந்து - *"எங்கள் குடும்பத்தினர் ஒரு முடிவெடுத்து விட்டால் அதில் இருந்து பின்வாங்கவே மாட்டார் கள்"* என்று ராகுல் காந்தி தம்பட்டமடிப்பதில் அர்த்தமில்லை.

ஈழத்தமிழர் விடயத்தில் இந்திராகாந்தி எடுத்த முடிவிலிருந்து ராஜீவ் பின்வாங்கி அதைக் குழப்பியடித்தார் என்பதே உண்மை. எனவே ராகுல் காந்தி உட்பட ராஜீவின் அரசியல் வாரிசு யாராவது இந்திரா அம்மையார் எடுத்த அந்த முடிவை செவ்வனே செயற்படுத்தி நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்தி விட்டு அதன் பின்னர் வேண்டுமானால் - எடுத்த முடிவிலிருந்து மாறாதவர்கள் எங்கள் குடும்பத்தவர் கள் என்று - தம்பட்டம் அடித்துக் கொள்ளலாம். அப்போதுதான் அந்த ஜம்பத்தில் சிறிதேனும் அர்த்தம் இருக்கும்.

[illegible]

# பாடசாலை பஸ் சேவையை சீராக்க நடவடிக்கை

## அமைச்சு அதிகாரிகள் வாக்குறுதி

யாழ்ப்பாணம், ஏப்.17

குடாநாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையைச் சீராக்குவது தொடர்பாக போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப்பட உள்ளது.

தற்போது குடாநாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுகின்றன. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

குடாநாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான பஸ் சேவையை முழுமையாகச் சீராக்குவதற்கு 36 பஸ்கள் தேவைப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. போதிய பஸ்கள் இல்லாமையாலும், பஸ்களுக்கான ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இல்லாமையாலும் மாணவர்களுக்கான பஸ் சேவையை முழுமையாகச் சீராக்க முடியவில்லை என போக்குவரத்துச் சபை அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போக்குவரத்து அமைச்சு அதிகாரிகளுடன் யாழ். அரச அதிபர் கே. கணேஷ் பேச்சு நடத்தினார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு அரச அதிபர் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

அதனையடுத்து ரயர்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பனவற்றைத் தேவையான அளவு கப்பல் மூலம் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளை விரைவில் மேற்கொள்வதாக போக்குவரத்து அமைச்சு அதிகாரிகள் தம்மிடம் தெரிவித்ததாக அரச அதிபர் தெரிவித்தார். (அ-8)

# இறுவட்டு வெளியீடு

சாந்திகம் உளவள நிலையத்தினால் 'உளமுருக' என்னும் இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இறுவட்டின் வெளியீட்டு விழாவும் உளவளத் துறையில் பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

வைத்திய கலாநிதி சா.சிவயோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளைத் தலைவருமான பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் கலந்துகொண்டார்.

இறுவட்டை கவிஞர் சோ.பத்மநாதன் வெளியிட்டு வைக்க பிரதம விருந்தினர் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் இசைநயம் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக் கழக இசைத்துறை விரிவுரையாளர் றொபேட் தவநாதன் உரை நிகழ்த்தினார். கலைஞர்கள் கௌரவிப்பும் இடம்பெற்றது. (202-68)

# வடமராட்சியில் தொடர்ந்து சுற்றிவளைப்புத் தேடுதல்கள்

உடுப்பிட்டி, ஏப்.17

அண்மைக் காலமாக வடமராட்சிப் பிரதேசத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்தில் அடிக்கடி சுற்றிவளைப்புகள் இடம்பெறுவதால் தொழிலாளர்களும், பொதுமக்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-155)

# யாழ். பல்கலைக்கு துணை வேந்தரை நியமிக்குமாறு ஆணைக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.17

யாழ். பல்கலைக்கழகத்துக்கு துணைவேந்தரை நியமிக்க ஏற்பாடு செய்யுமாறு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, யாழ். பல்கலைக்கழகத்தின் தலைமை அதிகாரியான பதிவாளரைக் கேட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த நியமனத்தைச் செய்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஆணைக்குழு பதிவாளரைக் கேட்டுள்ளது.

கடந்தவருடம் மார்ச் மாதம் மூன்று வருடங்களுக்கு நடைமுறையில் உள்ளதாக துணைவேந்தராக ரட்ணஜீவன் கூல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் பதவியேற்பதற்கு எதிராக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டங்களை நடத்தியதன் காரணமாக அவர் பதவியேற்க முடியாத நிலை உருவாகியது.

அதன்பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விசேட கூட்டம் ஒன்றை நடத்தி பதில் துணைவேந்தராக பேராசிரியர் இ. குமாரவடிவேலை நியமித்தது.

தற்சமயம் துணைவேந்தர் ஒருவரை நியமிக்க ஏற்பாடு செய்யுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கோரியுள்ளது.

இதன்பிரகாரம் பல்கலைக் கழகத்தின் பேரவை எதிர்வரும் 28ஆம் திகதி கூடி புதிய துணைவேந்தரை நியமிப்பது தொடர்பாக ஆராய உள்ளது. (அ-1)

# திருமலையில் தேங்கியிருந்த 5 ஆயிரம் தபால் பொதிகள் 'இந்துருவலி' கப்பலில் எடுத்துவரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப்.17

திருகோணமலை தபால் நிலையத்தில் கடந்த மூன்று மாத காலமாகத் தேங்கிக் கிடந்த 5 ஆயிரத்து 213 தபால் பொதிகள் 'இந்துருவலி' கப்பலில் நேற்று ஏற்றப்பட்டுள்ளன.

வடபிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி.குமரகுரு இதனைத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நேற்றுக்காலை வரை திருகோணமலை துறைமுகத்தில் வைத்து இப்பொதிகள் ஏற்றி முடிக்கப்பட்டன.

உணவுப் பொதிகள் அடங்கிய 4,043 தபால் பொதிகளும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய ஆயிரத்து 170 தபால் பொதிகளும் எடுத்து வரப்படுகின்றன என்றும் பிரதித் தபால் மா அதிபர் தெரிவித்தார்.

தபால் பொதிகளுடன்கோதுமை மாவையும் ஏற்றிக்கொண்டு இக் கப்பல் ஓரிரு தினங்களில் காங்கேசன்துறை வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ-1)

# தானிய வகைகளைப் பயிரிடுவதில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம்

## மரக்கறிகளின் விலை வீழ்ச்சியும் காரணம்

யாழ்ப்பாணம், ஏப்.17

குடாநாட்டு விவசாயிகள் தற்போது குரக்கன், சாமை, எள் போன்ற தானிய வகைகளைப் பயிரிடுவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். மரக்கறி வகைகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

கடந்த சில போகங்களில் குடாநாட்டு விவசாயிகள் தானிய வகைகளைப் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. வெங்காயம், புகையிலை மற்றும் மரக்கறிப் பயிர்களிலேயே ஆர்வமாக இருந்தனர்.

மேற்படி உற்பத்திகளை தெற்கே அனுப்பி சந்தைப்படுத்தப்படாமையாலும் குடாநாட்டு சந்தைகளில் அவற்றுக்குப் பெரும் விலை வீழ்ச்சி ஏற்பட்டதாலும் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டனர்.

இதன் காரணமாக விவசாயிகள் தானிய வகைகளைப் பயிரிடுவதிலேயே இப்போது அதிக ஆர்வம் காட்டுகின்றனர். (202-04)

# இராணுவ ரீதியான தீர்வுக்கே சிங்கள மக்கள் அதிக ஆதரவு

## கருத்துக்கணிப்பில் தகவல்

கொழும்பு, ஏப். 17

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காண்பதற்குப் பெரும்பான்மையான சிங்களவர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர் என்பது தெரிய வந்திருக்கிறது.

மாற்றுக் கொள்கைக்கான நிலையம் நடத்திய கருத்துக்கணிப்பு ஒன்றிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் ஆய்வறிக்கையின்படி ஆய்வுக்குட்பட்ட சிங்களவர்களில் 59.2 வீதமானவர்கள் இராணுவத் தீர்வுக்கே ஆதரவு வழங்கியிருக்கிறார்கள். 48 வீதமானவர்கள் மஹிந்த ராஜபக்ஷ புலிகளுக்கு எதிராக வெற்றிகரமாக இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பார் என நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

புலிகளைத் தோற்கடிப்பதற்காக அரசுக்கு ஆதரவளிப்போரின் வீதம் 26.1 வீதத்திலிருந்து 35.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதே வேளை, பேச்சு மூலமான தீர் வுக்கான சிங்களவர்களின் ஆதரவு 57.3 வீதத்திலிருந்து 46.3 வீதத்துக்குக் குறைந் துள்ளது.

இந்நிலையம் முன்னர் நடத்திய ஆய்வின்போது சிங்களவர்களின் ஆதரவு இராணுவத் தீர்வுக்கு 26.1 வீதமாகவும் பேச்சு மூல மான தீர்வுக்கான ஆதரவு 57. 3 வீதமாகவும் இருந்தமை குறிப்பிடத்தக் கது.

ஆனால், தற்போதைய ஆய்வின்போது மலையகத் தமிழ், முஸ்லிம் மக்கள் சந்தேக மனப்பான்மையுடன் இருக் கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆய்வு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழர்களிடம் நடத்தப்படவில்லை. வடக்கு - கிழக்கிற்கு வெளியேயுள்ள இலங்கையர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்கள் ஆகியோரிடம் நடத்தப்பட்டது. என்று மாற்றுக் [illegible] (சி)

**நாளை**
**சித்திரை - 05**
**புதன்கிழமை**
**18.04.2007**
**திதி: பிரதமை**
**பிற்பகல் : 03.18**
**நட்சத்திரம்: அச்சுவினி**
**முற்பகல் : 10.38**
**சித்திரைப் பரணி**
**சுபநேரம் : 04.33 - 06.03**
**ராகுகாலம் : 12.03 - 01.33**

# திருப்பதியில் சந்திரசேகரன்

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெரியசாமி சந்திரசேகரன் இன்று தனது 50ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகிறார்.

தற்போது இந்தியாவில் உள்ள அமைச்சர் தனது பிறந்தநாளை ஒட்டி இன்று ஆந்திரா மாநிலத்தில் உள்ள திருப்பதி தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபடவுள்ளார்.

அவர் நேற்று கல்கி பகவானையும் மேல் மருவத்தூர் பங்கார் அடிகளாரையும் சந்தித்து ஆசி பெற்றார். இவரது பிறந்தநாளை ஒட்டி மலையக மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள் மே மாதம் நடுப்பகுதியில் அவரது 30 வருட அரசியலையும் சமூக சேவையையும் கௌரவித்து பாராட்டு விழா ஒன்றை நடத்தவுள்ளனர். (சி)

# வலைகள் பகிர்ந்தளிப்பில் சீர்கேடு என முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.17

சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் உதவியுடன் கடற்றொழிலாளர் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வலைகள், பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய முறையில் வழங்கப்படவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றை விநியோகம் செய்ததில் பெரும் சீர்கேடு இடம்பெற்றுள்ளதாக சாவற்கட்டு மகாத்மா காந்தி சனசமூக நிலையத்தினர், வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடம் முறையிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக சனசமூக நிலையத்தினரால் சமாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏனைய கடற்றொழிலாளர் சங்கங்களில் நடைபெற்றது போன்று எமது பகுதியில் தொழிலாளருக்கான மீன்பிடி வலைகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. அரச ஊழியர்கள் மற்றும் கடல் உணவு கொள்வனவாளர்களுக்கும் கடற்றொழிலுடன் சம்பந்தப்படாதவர்களுக்கும் தொழில் செய்வதற்குப் பிரதானமாகத் தேவைப்படும் வலைகள் விநியோகிக்கப்படுகின்றன. எனவே இது தொடர்பாக கவனத்தில் எடுத்து தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் - என்று கோரப்பட்டுள்ளது. (அ-203)

# யாழ். வங்கிகள் நாளை மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.17

குடாநாட்டில் உள்ள வங்கிகளுக்கு நாளை புதன்கிழமை விசேட வங்கி விடுமுறையாகும்.

கடந்த 3ஆம் திகதி விசேட வங்கி விடுமுறையாக இருந்தபோதிலும் வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அன்றைய தினம் வங்கிகள் யாவும் திறந்து செயற்பட்டன.

அதற்குப் பதிலாகவே நாளை புதன்கிழமை குடாநாட்டில் உள்ள சகல வங்கிகள் யாவும் மூடப்பட்டிருக்கும் என்று வங்கியாளர் சங்கச் செயலாளர் ந. சிவரத்தினம் தெரிவித்தார். (203)

# இலவச வைத்தியசாலை இயங்காததால் பாதிப்பு

சுழிபுரம், ஏப்.17

சுழிபுரத்தில் உள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலை கடந்த சுமார் இரண்டு வாரங்களாக இயங்கவில்லை. அதனால் வசதி குறைந்த நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மக்களுக்கு ஏற்பட்டுள்ள இப்பாதிப்பை நீக்கும் வகையில் மேற்படி வைத்தியசாலையைத் திறந்து நோயாளர் சிகிச்சைபெற வசதி செய்யுமாறு பிரதேச செயலரிடம் மகஜர் மூலம் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையின் நிரந்தர வைத்தியர் லீவில் சென்றதாலேயே அது மூடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு முன்னர் அவர் லீவில் செல்லும் போது பதில் வைத்தியர் பணியாற்றுவதுண்டு. இம்முறை அந்த வசதி செய்யப்படாததாலேயே நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (அ-28)

# தாதியரை நியமிக்க அனுமதி

கொழும்பு, ஏப்.17

500 தமிழ் பேசும் குடும்ப நல தாதியர்களை நாடு முழுவதும் நியமிக்க கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மலையகத் தோட்டங்களில் பெண்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க குடும்பத் தாதியர் நியமனம் உதவுமென சுகாதார பிரதியமைச்சர் சுரேஷ் வடிவேல் தெரிவித்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு நிதி உதவி வழங்கக்கூடாது; நெதர்லாந்து அமைச்சருக்கு மகஜர்

நெதர்லாந்து, ஏப். 17

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் ஸ்ரீலங்கா அரசுக்கு எதுவித நிதி உதவிகளையும் நெதர்லாந்து அரசாங்கம் செய்யக்கூடாது இவ்வாறு கோரும் மனு ஒன்று அந்நாட்டு அபிவிருத்தி அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

இந்த மனுவை நெதர்லாந்தின் அபிவிருத்தி அமைச்சர் பேர்ற் குண்டர்ஸ் பெற்றுக்கொண்டார்.

இந்த மனுவைத் தமது அரசு ஆராய்ந்து அது குறித்து முடிவு செய்யும் என்று அவர் அங்கு தெரிவித்தார்.

நெதர்லாந்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான தொழிற் கட்சியின் ஏற்பாட்டில் ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கான அபிவிருத்தி தொடர்பான முக்கிய ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தொடரில் நெதர்லாந்தின் தமிழர் மனித உரிமை அமைப்பின் சார்பாக அதன் தலைவர் இந்திரன் சின்னையா கலந்துகொண்டார்.

அவரே மேற்படி மனுவை அமைச்சர்களிடம் கையளித்தார். (அ-சி)

## ஈழத்தமிழர் ஆதரவை இல்லாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போருக்கு தமிழகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஆதரவு வலுத்து வருகிறது. அதை இல்லாது செய்யும் நோக்கத்துடனேயே நம் காவல் துறையினர் இப்படிச் செய்து வருகிறார்கள். வெடிகுண்டு கடத்துகிறார்கள் என்று கைதுசெய்யப்பட்டவர்களை வெடிச்சட்ட வழக்கில்தானே கைது செய்திருக்க வேண்டும். ஆனால் அவர்களைபிணையில் அவ்வளவு சீக்கிரமாக வெளியே வந்துவிட முடியாத தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறையில் அடைக்கிறார்கள் ஏன் அப்படிச் செய்யவேண்டும்.

அதுமட்டுமல்ல இலங்கையில் சைக்கிள் உற்பத்தி கிடையாது. ஆகவே இங்கிருந்து சைக்கிள் செய்யத் தேவையான பொருள்களை கடத்திச் சென்று அங்கு விற்பனை செய்வார்கள். இப்படிப்பட்ட பொருள்களை விற்பதற்கென்று கொழும்பில் தனித் தெருவே இருக்கின்றது. இந்தக் கடத்தல் காலம்காலமாக நடந்துகொண்டிருப்பதுதான். அப்படி நடப்பது நம் காவல் துறைக்கும் நன்கு தெரியும். திடீரென இப்போது ஏதோ பயங்கர ஆயுதங்களோடு ஆள்களைப் பிடித்துவிட்டது மாதிரியான தோற்றத்தை எழுப்புகிறார்கள் காவல் துறையினர்.

விமானப்படை வரை இன்று புலிகளிடம் இருக்கும்போது பால்ரஸ் குண்டுகளையும் சைக்கிள் பியரிங் குண்டுகளையும் பெரிய ஆயுதங்களாகச் சித்திரித்துப் புலிகளை சிறுமைப்படுத்துவதாக நினைத்துப் பொலிஸார் செயற்படுகின்றனர் என்று கூறியுள்ளார். (அ-1)

## மண்டபம் முகாமிலிருந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ்உயர்அதிகாரி ஒருவர்கூறியதாவது:-

மண்டபம் முகாமில் அகதிகள் போர்வையில் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருப்பது இதற்கு முன்பும் நடந்தது இரு கிறது. ஆனால் உளவாளிகள் ஊடுருவி அவர்கள் எங்களின்பிடியில்மாட்டிக்கொண்டதுஇதுவே முதல் முறையாகும். அவர்கள் தமிழக மக்களின் மனோ நிலையை அறிந்து கொள்ளவும் இங்குள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி தெரிந்து கொள்ளவும் வந்திருக்கலாம் என்று நாங்கள் கருதுகிறோம்.

இதற்காக விடுதலைப் புலிகள் அல்லது அவர்களின் உளவாளிகள் பலர் அகதி கள் போர்வையில் தமிழகத்திற்குள் ஊடு ருவி இருக்கலாமோ என்ற சந்தேகம் ஏற் பட்டு உள்ளது - என்றார்.

இதேவேளை தமிழகத்தின் அனைத்து அகதிகள் முகாம்களிலும் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. அதிரடி சோதனைகளும் நடத்தப்படுகிறது. அகதி கள் ஒவ்வொருவரும் தனித் தனியாக கண் காணிக்கப்படுகிறார்கள். தீவிர விசாரணைக்கு பிறகே அவர்கள் முகாமுக்கு அனுப்பப்படுகிறார்கள் - இவ்வாறு அவர் கூறினார். (அ)

## விடுதலைப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைச்சாத்தான போர்நிறுத்த ஒப்பந்தத்தின் மீதும் அரசு பற்றுறுதி இல்லா திருப்பதாகக் கூறுவதை நாங்கள் நிராகரிக் கிறோம்.

ஜனாதிபதியும் அரசினரும் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர்.

அவ்வாறு இருக்கையில், அரசுக்குப் பேச்சு வார்த்தையில் அக்கறை இல்லை என்று கூறுவது அபத்தமானது.

சகல சமூகங்களுக்கும் நன்மையளிக்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு - என்று வெளிவிவகாரச் செயலாளர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (அ-1)

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவைச் சந்திக்கக் கூடாது, மீறிச் செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றெல்லாம் எச்சரிக்கப்பட்ட பின்னர் அவர்விடுவிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா சென்றுள்ள பரமேஸ்வரி நாடு திரும்புவது சந்தேகமெனவும்,அங்கிருந்து இவர் வெளிநாடொன்றுக்குப் புகலிடம் கோரி செல்லக்கூடுமென்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)


கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை
கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
பதவி வெற்றிடங்கள் (ஆண்கள் - பெண்கள்)

★ தகைமைகள் :- க.பொ.த. (சா/த) சித்தி
★ வயது : 20 தொடக்கம் 55 வரை
★ உயரம் : 5' 4''
★ குறிப்பு : I. இளைப்பாறிய பொலீஸ் / படை உத்தியோகத்தர்கள், சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்களுக்கு முன்னுரிமை,
II. நல்ல கண்பார்வையும், தேகாரோக்கியமும் இருத்தல் வேண்டும்.
★ சம்பளம் : வருகை ஊக்குவிப்பு பணம், இரவு முறைமாற்றக் கொடுப்பனவு உட்பட மாதமொன்றுக்கு ரூபா 7,820 வழங்கப்படும். மற்றும் EPF, ETF, Insurance வழங்கப்படும்.

நேர்முகப் பரீட்சை 21.04.2007 சனிக்கிழமை காலை 10மணிக்கு கீழ்க் குறிப்பிட்ட முகவரியில் நடைபெறும். பின்வரும் நற்சான்றிதழ்களுடன் சமுகம் கொடுக்கவும்.
01. கிராம அதிகாரியின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதங்களுக்கு உட்பட்டது)
02. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
03. தே. அ. அ., வி. அ. anthropology.
04. கல்விச் சான்றிதழ்.
உண்மைப் பிரதியுடன் சகலதினதும் போட்டோப் பிரதியும் கொண்டு வரவும்.
இல. 337 1/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி/52267) பணிப்பாளர்.

A/L 2009
புதிய பிரிவு
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:18.04.2007
புதன் பி.ப. 3.00
கணக்கீடு: பாலகஜன்
பொருளியல்: N.B.கஜீதரன்
வணிகக் கல்வி: S.சசி
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
O/L Commerce எடுக்காதவர்களுக்கு அதிக கவனம்
BRAIN POWER INSTITUTE
Gurunagar. Jaffna.

பிரத்தியேக வகுப்பு
புவியியல்-2009
புதிய பிரிவு
ஆரம்பம்:18.04.2007
புதன் 9 a.m
ஆசிரியர்: N.S.சங்கர் B.A.(Hons) Geo.
மயிலணி சிவன் கோயில்முன் சுன்னாகம்.

பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி
O/L Day Class
ஆரம்பம் 19.04.2007 வியாழன் 8 a.m.
✱ கடந்த வருட பெறுபேறுகள் எமது நிறுவனத்தின் திறமைக்கு சான்று.
(59723)

தேசிய பாடசாலைகளிலும் மாகாணக் கல்வி அமைச்சின் கீழ்வரும் பாடசாலைகளிலும் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான
போட்டிப் பரீட்சை வழிகாட்டி - 2007
நுண்ணறிவு
(கடந்த கால மாதிரி வினாத்தாள்கள் உட்பட பத்து நுண்ணறிவு வினாத்தாள்கள் விடைகளுடன்)
பொது அறிவு
(மிக விரிவான முறையில் மிக அண்மைக்கால பொது அறிவு விடயங்களுடன் கடந்த கால மாதிரி வினா விடைகளும்)
2007 இல் இறுதியாக நடைபெற்ற பொது அறிவும் நுண்ணறிவும் வினாக்கள் விடையுடன் இணைக்கப்பட்டுள்ளன
ஆசிரியர் : P.உமாசங்கர்
பூபாலசிங்கம் புத்தகசாலை
(59746) யாழ்ப்பாணம்.


## நூறாவது ஆண்டு ஜனனதினம்



ஜனனதினம் 1907 - 04 - 17

சிரார்த்ததினம் 1978 - 03 - 30

**சித்தியவான் கணபதிப்பிள்ளை, வைத்திய கலாநிதி செல்வத்துரை**

ஆண்டுகள் நூறாகும் இன்று<br>
தூண்டும் சுடரென மிளிர்ந்தோய்<br>
நீண்டநாளானாலும் நினைவு மறையுமோ<br>
என்றும் இறைவனடியில் பெறுக சாந்தி!

Dr.செல்வத்துரை வீதி, 'முரளி குன்றம்'<br>
சங்கரத்தை, வட்டுக்கோட்டை. - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி சாந்தி கிறிஸ் மரியலீனஸ் அவர்களின் அன்புத்தாய் திருமதி **தவமணி சிறில்** (கத்தரீன்) அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரடைவதோடு, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## குருநாதபிள்ளை சிவப்பிரகாசம்



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்துவந்தவருமாகிய குருநாதபிள்ளை சிவப்பிரகாசம் நேற்று (16.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருநாதபிள்ளை - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினி தேவியின் அன்புக் கணவரும் கெங்காதேவி, ரோகினி, தயானந்ததேவி, கிருபாகரன், மதிவாணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் கோணேஸ்வரன், ஜெயச்சந்திரன், நேசகுமார், கௌரி ஆகியோரின் அன்பு மாமனும் கண்ணன், அஜித்குமார், விதூஷன், துளசிகா, எசிந்தாதேவி, தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான அன்னசோதிப்பிள்ளை, கிளி மற்றும் சீதாலட்சுமி, திருச்செல்வம், பராசக்தி, சுந்தரலிங்கம், கனகலிங்கம், மங்கையர்க்கரசி, திருக்கேதீஸ்வரி, காலஞ்சென்ற கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.04.2007) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.* (59745)

தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி ஐயாத்துரை சரஸ்வதி



132/1, பிறவுண் வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சரஸ்வதி நேற்று (16.04.2007) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சின்னையா ஐயாத்துரையின் மனைவியும் கதிர்காமநாதன் (பிரான்ஸ்), வேணுகோபாலன் (லண்டன்), வரதராஜா (குஞ்சன், மாருதி ரேடியோ சென்ரர், யாழ்ப்பாணம்), சாந்தினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற இராசையா மற்றும் செல்லையா, காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், கனகரத்தினம் மற்றும் பாலசிங்கம், அருளானந்தம் ஆகியோரின் சகோதரியும் றஜனி (பிரான்ஸ்), துளசி (லண்டன்), கௌரி, சசிகரன், ஜீவரத்தினம் ஆகியோரின் மாமியும் சாஜீசன், தர்சன், தர்சனா, விஷ்ணுகன், சோபிகன், மிதுனா, துசாந்தி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*132/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (59748)

தகவல்: பிள்ளைகள், மருமக்கள். 021 2225443.

## திருமதி சிறில் கத்தரீன் தவமணி



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறில் கத்தரீன் தவமணி அவர்கள் நேற்று (16.04.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சாமுவேல் (மாணிக்கம்) தம்பதியரின் ஏக புத்திரியும் திரு.திருமதி பேதுரு அந்தோனி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அந்தோனி சிறில் (அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் றெஜீனா, திரேசா (ஓய்வுபெற்ற உப அதிபர், உடுவில் மான்ஸ் மகா வித்தி.), றீற்றா, சிறில் சுகந்தரன் (அதிபர், ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை), சிறில் அன்ரன் பெஞ்சமின் (அரச நில அளவையாளர், மன்னார்), சிறில் மத்தியூஸ் (யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், UNDP), சாந்திகிறேஸ் (ஆசிரியை, நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான தெசராஜசிங்கம், ஆசீர்வாதம், கென்றி (J.P), மரியநாயகம் மற்றும் சிறியபுஸ்பம், இராசநாயகி, மரியகொறற்றி, மரியவீனஸ் ஆகியோரின் அன்பு மாமியும் வசந்தி (சுவிஸ்), ஜெயச்சந்திரன் (DDG), ஜெயக்குமார் (ஆசிரியர், தலைமன்னார் - G.T.M.S), சுகந்தி (கனடா), நிர்மலா, விக்டர்சிறில் (SDC), மேரிடயானா (மட்.-கல்வியியற் கல்லூரி), யூட், சன்ரோனியா, கிருபாலினி, பிறின்ஸ்ஜோன், றெக்சிபிறின்ஸ், றிச்சாட்பிறின்ஸ், பிறின்சியா, சௌதினி ஜோய், பியோஜீன் ஆகியோரின் பேத்தியும் தூபிகா, கீர்த்தனன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து இன்று (17.04.2007) செவ்வாய்க்கிழமை பி.ப.ஒரு மணிக்கு இரங்கற் திருப்பலிக்காக நவாலி சென்.பீற்றேஸ் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் நவாலி சென்.பீற்றேஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.* (59747)

தகவல்: சிறில் சுகந்தரன் (மகன் JP), அதிபர், யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org